***(S.T.C. No. 07 of 2025)***

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.</u>**

**முன்னிலை : திரு. P.ஆசைமருது, பி,ஏ., எல்.எல்.பி.,**

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), தேனி.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை.**

**<u>S.T.C. No. 07/2025</u>**
**<u>CNR No. TNTH02-000068-2025</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | சுருக்குப் பட்டிகை வழக்கு எண் | : | **07/2025** |
| 2. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தேனி காவல் நிலையம், |
| 3. | குற்ற எண் மற்றும் சட்டப் பிரிவுகள் | : | குற்ற எண். 926/2021,<br>சட்டப் பிரிவுகள் **279 IPC and u/s. 132 r/w 177, 184 MV Act.** |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | பிரபாகரன் (வயது 25/2021)<br>த/பெ.முருகன்,<br>முகவரி: குறிஞ்சி நகர், காந்திநகர், அல்லிநகரம், தேனி. |
| 5. | சம்பவ தேதி | : | 21.08.2021 |
| 6. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 21.08.2021 |
| 7. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 25.08.2021 |
| 8. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 19.09.2025 |
| 9. | எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவு **279 IPC and u/s.132 r/w 177, 184 MV Act–ன்** கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 10. | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 11. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 07.12.2023 |

***(S.T.C. No. 07 of 2025)***

| | | | |
|---|---|---|---|
| 12. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 16.03.2026 |
| 13. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 27.03.2026 |
| 14. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி மீது **சட்டப்பிரிவு 279 IPC and u/s.132 r/w 177, 184 MV Act–ன் கீழ்** குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. |
| 15. | தீர்ப்பும் தண்டனையும் | : | **முடிவாக, இவ்வழக்கின் எதிரியை கு.விமுச பிரிவு 255(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, சட்டப்பிரிவு 279 IPC and u/s.132 r/w 177, 184 MV Act–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**<br><br>**இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.** |
| 16. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை. |
| 17. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

இவ்வழக்கானது கடந்த 17.11.2022 அன்று இந்நீதிமன்றத்தில் STC.No. 2486/22 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் கடிதம் 143/24, தேதி 09.09.2024–ல் பிறப்பித்த செயல்முறை ஆணையின்படி 19.09.2024 அன்று Spl. STC. No.02/2024 ஆக Spl Magistrate, Theni–க்கு மாறுதலாகியும், அங்கிருந்து மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் கடிதம் 05/25, தேதி 03.01.2025 ல் பிறப்பித்த செயல்முறை ஆணையின்படி 10.01.2025 அன்று STC. No. 07/2025 ஆக இந்நீதிமன்றத்திற்கு

*(S.T.C. No. 07 of 2025)*

மாறுதலாகி கடந்த 10.01.2025–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.03.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் . . . . .

**தீர்ப்புரை**

1) இவ்வழக்கின் வாதி குபேந்திரன், கோடாங்கிபட்டி 4 வது வார்டு குணசீலன் கடைத்தெருவில் குடியிருந்து வருவதாகவும், 21.08.2021–ம் தேதி வாதி TN 84 F 3547 என்ற எண் கொண்ட காரை தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உள்ள வேலு மோட்டார்ஸ்–ல் ஆயில் சர்வீஸ் செய்து விட்டு, காலை 11.45 மணியளவில் மதுரை டூ தேனி மெயின் ரோட்டில் ரயில்வே கேட் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றபோது, மேற்படி ரோட்டில் வாதிக்கு பின்னால் இருந்து வந்த TN 60 E 4437 என்ற எண் கொண்ட லாரியை ஓட்டி வந்த எதிரி பிரபாகரன் என்பவர் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொதுமக்கள் பீதி அடையும் வகையில் தாறுமாறாகவும், அசட்டு துணிச்சலுடனும் ஓட்டி வந்து, வாதிக்கு வலது பக்கம் ஏறி வாதியின் காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி வாதியின் காருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தி, தேனி காவல் நிலையத்தில் லாரியை நிறுத்தாமல் மீண்டும் வேகமாக சென்ற குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச.பிரிவு 279 and 132 r/w 177, 184 MV Act–ன் கீழும் குற்றம் புரிந்ததாக தேனி காவல் ஆய்வாளரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடித்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் STC. No. 07 / 2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரி மீதான

*(S.T.C. No. 07 of 2025)*

இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்குப் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் எதிரி மீது இ.த.ச.பிரிவு 279 and u/s. 132 r/w 177, 184 MV Act–ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி தமிழில் விளக்கி வினவிய போது, எதிரி குற்றவாளி இல்லை என்றும், குற்றத்தினை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார்.

3) எதிரி குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அவர்கள்மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) **அரசுத் தரப்பின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு சாட்சிய சுருக்கம்:**

(i) அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் கோடாங்கிபட்டியில் குடியிருந்து வருவதாகவும், தான் விவசாயம் செய்து வருவதாகவும், எதிரியை தெரியும் என்றும், 20.08.2021 அன்று பகல் 11.45 மணியளவில் அரண்மனைபுதூர் ரயில்வே கேட் அருகே ஒர்க்–ஷாபில் வேலை பார்த்துவிட்டு தனது காரில் மதுரையிலிருந்து தேனி நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது ரயில்வே கேட் அருகே வரும்போது, அவர் ஓட்டி வந்த லாரியை தனது கார் மீது இடித்து விட்டதாகவும், அவர் லாரியை மறித்து காவல்நிலையத்திற்கு அழைத்து புகார் கொடுத்ததாகவும், அதில் தன் காரின் கதவு பகுதி சேதமடைந்து விட்டதாகவும், இது சம்பந்தமாக தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் கொடுத்தது என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தான் கொடுத்த புகார் மனு

(S.T.C. No. 07 of 2025)

அ.சா.ஆ.1 என்றும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், எதிரியை தெரியும் என்றும், தேதி, மாதம் தனக்கு தெரியவில்லை என்றும், கடந்த 2021–ம் வருடம் 11.30 மணியளவில் தானும், அ.சா.1 குபேந்திரனும் கோடாங்கிபட்டியிலிருந்து அவரை இருசக்கரவாகனத்தில் ஏற்றிக் கொண்டு போய் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள வேலுச்சாமி என்பவர் ஒர்க்–ஷாப்பிலிருந்து குபேந்திரன் வண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்ததாகவும், தான் இருசக்கரவாகனத்தில் வந்ததாகவும், குபேந்திரன் காரில் வந்ததாகவும், அந்த சமயத்தில் ரயில்வேகேட் அருகே கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருக்கும்போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த லாரியை எதிரி ஓட்டி வந்து வேகதடையில் ஏற்றி குபேந்திரன் கார் மீது இடித்து விட்டதாகவும், அதில் குபேந்திரன் கார் கதவு சேதமடைந்துவிட்டதாகவும், லாரியின் பதிவு எண்.தெரியாது என்றும், குபேந்திரன் கார் சிப்ட் டிசைர் என்றும், விபத்து நடந்தவுடன் முதலில் எதிரி லாரியை நிறுத்தியதாகவும், அவரை காவல்நிலையத்திற்கு அழைத்த போது லாரியை எடுத்துக்கொண்டு கேஸ் கடை வரை சென்றவரை விரட்டி சென்று மறித்து அழைத்து வந்ததாகவும், விபத்து சம்பந்தமாக குபேந்திரன் புகார் கொடுத்ததாகவும், புகாரில் சாட்சி கையொப்பம் இட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், புகார் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே, குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 தனது சாட்சியத்தில், அ.சா.1 ஐ தெரியும் என்றும், எதிரியை தெரியும் என்றும், 21.08.2021 அன்று காலை 11.15 மணியளவில் தான் அரண்மனைபுதூர் விலக்கில் ரயில்வேகேட் அருகில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் தங்கள் ஊரைச் சேர்ந்த குபேந்திரன் காரில் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டின் இடது

புறமாக காரில் வந்து கொண்டிருந்ததாகவும், அதே பக்கத்திலிருந்து எதிரி ஒரு லாரியை ஓட்டி வந்து குபேந்திரன் கார் மீது மோதி காரில் வலது பக்கம் சேதமடைந்துவிட்டதாகவும், உடனே தான் தன்னுடன் பேசிக் கொண்டிருந்த தனது உறவினர் ஒருவரும் பார்த்தபோது எதிரிக்கும் அ.சா.1 க்கும் வண்டியை இடித்தது சம்பந்தமாக சண்டை நடந்து கொண்டிருந்ததாகவும், அவர்களை தாங்கள் சத்தம் போட்டு காவல்நிலையம் சென்று நடவடிக்கை எடுக்கும்படி சொன்னதாகவும், அதற்கு பிறகு போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 தனது சாட்சியத்தில், தனது அப்பா பெயர் பொன்ராஜ் என்றும், ஆனால் வழக்கில் பொன்னுச்சாமி என காட்டப்பட்டுள்ளதாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், போலீசார் அழைத்ததன் பேரில் இன்று நீதிமன்றத்திற்கு வந்ததாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 தனது சாட்சியத்தில், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், தேதி, மாதம், வருடம் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், எவ்வளவு நாள் என்றும் ஞாபகம் இல்லை என்றும், தேனி டூ மதுரை செல்லும் ரோட்டில் ரயில்வே டிராக் அருகில் ஒரு நாள் தான் சென்று கொண்டிருந்தபோது ஒரு ஏட்டையா தன்னை நிறுத்தி கையெழுத்து கேட்டதாகவும், என்ன வழக்கு சம்மந்தமாக என்று தனக்கு தெரியாது என்றும், பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.1 தனக்கு தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2021 அன்று தேதி மாதம் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், இரவு 09.00 மணிக்கு தனது குழந்தைகளை அழைப்பதற்காக சென்று கொண்டிருந்தபோது, தேனி காவல் நிலையத்தில் தனது சித்தப்பா

***(S.T.C. No. 07 of 2025)***

திருக்கண்ணன் என்பவர் இருந்ததாகவும், அவரிடம் என்ன என்று கேட்டபோது, அவர் விபத்து நடந்ததாகவும், அது சம்பந்தமாகவும் பேசிக்கொண்டிருப்பதாகவும், சாட்சிக்காக தன்னிடம் கையெழுத்து கேட்டதாகவும், தான் போட்டதாகவும், சம்பவம் எதையும் தான் பார்க்கவில்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vii) அ.சா.7 தனது சாட்சியத்தில், தான் தற்போது, தேனி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 21.08.2021 ஆம் தேதியன்று, நிலைய அலுவலில் இருந்தபோது, தேனி மாவட்டம், கோடாங்கிபட்டியைச் சேர்ந்த வீரணத்தேவர் மகன் குபேந்திரன் என்பவர் கொடுத்த புகார் மனுவினைப் பெற்று, தேனி காவல் நிலையத்தில் கடந்த 21.08.2021 ஆம் தேதி 22.45 மணிக்கு மனு ரசீது எண். 632/2021 –ஐப் பதிவு செய்து, காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், மேற்படி தான் பதிவு செய்த மனு ரசீது அ.சா.ஆ.3 என்றும், இதுசம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) அ.சா.8 தனது சாட்சியத்தில், தான் தற்போது, காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தான் தேனி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, கடந்த 23.08.2021 ஆம் தேதியன்று, பகல் 12.00 மணிக்கு தேனி காவல் நிலைய மனு ரசீது எண்.632/2021 –ஐ பார்வையிட்டு, மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரின் தன்மைக்கேற்ப தேனி காவல் நிலையக் குற்ற எண். 926/2021 மற்றும் சட்டப் பிரிவுகள் 279 இ.த.ச and u/s. 132 r/w 177, 184 M.V. Act– ன் கீழ் வழக்குப் பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** என்றும், புகார் மனுவின் அசலையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் தேனி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், அதன் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்ததாகவும், அன்றைய

தினமே, 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சாட்சிகள் முருகன் மற்றும் இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் 13.00 மணி முதல் 14.15 மணி வரை மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து கையெழுத்துப் பெற்று, அவர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், **நான் பதிவு செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** என்றும், பின்னர், சாட்சிகள் குபேந்திரன், தொட்டியப்பன், திருக்கண்ணன் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர், கடந்த 25.08.2021 ஆம் தேதி, காலை 10.00 மணிக்கு நிலையத்தில் வைத்து, எதிரி பிரபாகரன் என்பவரை கைது செய்தும், தக்க ஜாமீனில் அவரை விடுவித்ததாகவும், விபத்திற்குள்ளான வாகனங்களான TN 60 E 4437 என்ற பதிவெண் கொண்ட லாரியும் மற்றும் TN 84 F 3547 என்ற பதிவெண் கொண்ட மாருதி டிசைர் என்ற வாகனத்தை வாகன ஆய்வுக்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், கடந்த 05.10.2021 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சுரேஷ் விஸ்வநாத் என்பவரை விசாரித்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், **மேற்படி வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்பட்டதாகவும்,** பின்னர் இவ்வழக்கில் மனு ரசீது பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் என்பவரை 05.10.2021 ஆம் தேதி விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279 இ.த.ச. and u/s. 132 r/w 177, 184 M.V. Act கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.**

5) இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றும் அரசு சாட்சியங்களை தொகுத்து

கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரி அரசு தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் எனவும், தன் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொதுமக்கள் பீதி அடையும் வகையிலும் தாறுமாறாக லாரியை ஒட்டி காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரி மீது தக்க தண்டனை வழங்குமாறும் வாதிட்டார்.

7) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அரசு தரப்பில் சொல்லப்படுவது போல் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொதுமக்கள் பீதி அடையும் வகையிலும் தாறுமாறாக லாரியை ஒட்டி காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றும், விபத்து சம்பந்தமான வழக்கில் CSR மனு பதிவு செய்து பின்னர் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய காவல்துறைக்கு எவ்வித வழிமுறையும் இல்லை என்று அவ்வாறு பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் எனவே, எதிரிக்கு எதிராக குற்றம் நிரூபணமாகவில்லை என்றும் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

8) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், **அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா?** என்பதே ஆகும்.

**<u>9) தீர்வும் மற்றும் தீர்வுக்கான காரணங்களும்:</u>**

*(S.T.C. No. 07 of 2025)*

(i) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.2 மற்றும் அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஆகிய சான்றாவணங்களிலிருந்து சம்பவத்தன்று விபத்து நடந்தது என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் விபத்தை ஏற்படுத்தவில்லை என்று எந்தவித எதிர்வாதமும் புரியவில்லை.

(ii) ஒரு வழக்கில் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பது குறித்து ஆராய்கையில், அவ்வாறு ஆராய்கையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ரவிகபூர் எதிர் ராஜஸ்தான் அரசு **Crl. Appeal No. 1838/2009] என்ற வழக்கில் பின்வருமாறு கூறியுள்ளது "10. In order to examine the merit or otherwise of contentions (b) and (c) raised on behalf of the appellant, it is necessary for the Court to first and foremost examine (a) what is rash and negligent driving; and (b) whether it can be gathered from the attendant circumstances. Rash and negligent driving has to be examined in light of the facts and circumstances of a given case. It is a fact incapable of being construed or seen in isolation. It must be examined in light of the attendant circumstances. A person who drives a vehicle on the road is liable to be held responsible for the act as well as for the result. It may not be always possible to determine with reference to the speed of a vehicle whether a person was driving rashly and negligently. Both these acts presuppose an abnormal conduct. Even when one is driving a vehicle at a slow speed but recklessly and negligently, it would amount to 'rash and negligent driving' within the meaning of the language of section 279 IPC.**

(iii) இவ்வழக்கில் எதிரி மீது பிரிவு 279 இ.த.ச–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை பொறுத்து ஆராய்ந்து பார்க்கையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு இருக்கும் அ.சா.1 தனது புகாரில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொதுமக்கள் பீதி அடையும் வகையிலும் றுமாறாக லாரியை ஓட்டி காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று கூறியுள்ளார். மேற்படி சாட்சி தனது நீதிமன்ற முதல்

*(S.T.C. No. 07 of 2025)*

விசாரணையில் எதிரி வாகனத்தை அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது முதல் விசாரணையில் எதிரி வேகமாக ஓட்டி வந்து வேகத்தடையில் ஏற்றி அ.சா.1ன் காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி அன்றைய தினத்தில் குறுக்கு விசாரணை செய்த போதும் சம்பவ இடத்தில் இருபுறமும் வேக தடை உள்ளது என்றால் அந்த சமயத்தில் இல்லை என்றும், எனது முதல் விசாரணையில் லாரி வேகத்தடையில் ஏறி இறங்கியதாக கூறியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு அ.சா.2 தனது முதல் விசாரணையில் சாட்சியமளித்துவிட்டு பின்னர் உடனே குறுக்கு விசாரணை செய்த சமயம் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.2 சம்பவத்தை நேரில் பார்த்துள்ளார் என்று அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழுகின்றது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மாதிரி வரைபடத்தை ஆராய்ந்து பார்க்கையில் சம்பவ இடத்தில் வேகத்தடை இருப்பது போன்ற எவ்வித குறிப்பும் இடம் பெறவில்லை. மேலும் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டு இருக்கும் அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் விபத்து பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள். இவை அனைத்தையும் வைத்து பார்க்கும் போது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 279 இ.த.ச சம்பந்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படாததாக நீதிமன்றம் கருதுகின்றது.

(iv) மேலும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டு இருக்கும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகளும் தங்களுக்கு பார்வை மகஜரில் உள்ள விவரங்கள் எதுவும் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக் கொண்டனர் கையெழுத்து செய்தோம் என்று கூறி சாட்சியளித்துள்ளார்கள். எனவே புலன் விசாரணை அதிகாரி உரிய சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்று அரசு தரப்பின் மீது சந்தேகம் எழுகின்றது.

(v) எதிரி மீது பிரிவு 132 r/w 177 MV Act–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை பொருத்தவரை விபத்து அல்லது சொத்து சேதம் ஏற்படும்போது வாகனத்தை நிறுத்துவது ஓட்டுநரின் கடமை தவறிவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ள பொருண்மையை மெய்ப்பித்து இருக்க வேண்டியது அவசியமாகும். மேற்படி குற்றச்சாட்டை பொருத்து ஆராய்ந்து பார்க்கையில் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்ததாக புலன்விசாரணை அதிகாரி கூறியுள்ளார். புலன்விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், எதிரி சம்பவ இடத்தில் இருந்து நிற்காமல் சென்று விட்டார் என்றோ அவரை விரட்டி பிடித்தார் என்றோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவர் எதிரியை அசா1 விரட்டி பிடித்து காவல் நிலையம் ஆஜர்படுத்தினார் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 132 r/w 177 MV Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

(vi) எதிரி மீது பிரிவு 184 MV Act–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை பொருத்தவரை பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில், அதிவேகமாகவோ அல்லது பொறுப்பற்ற முறையிலோ வாகனம் ஓட்டுவது என்பதை நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் எவரும் தங்களது சாட்சியத்தில் எதிரி ஆபத்தை விளைவிக்கும் வகையில், அதிவேகமாகவோ அல்லது பொறுப்பற்ற முறையிலோ வாகனம் ஓட்டினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி குற்றச்சாட்டைமெய்ப்பிக்கும் வகையில் இல்லை என்று அரசு தரப்பு வழக்கை வலுவிழக்க செய்துள்ளது.

***(S.T.C. No. 07 of 2025)***

**முடிவாக, இவ்வழக்கின் எதிரியை கு.விமுச பிரிவு 255(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, சட்டப்பிரிவு 279 IPC and u/s. 132 r/w 177, 184 MV Act–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

**இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து–தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

AASAY MARUDHU P — Digitally signed by AASAY MARUDHU P Date: 2026.03.27 19:45:15 +0400

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | : | திரு. குபேந்திரன் | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | : | திரு. தொட்டியப்பன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| 3. | அ.சா.3 | : | திரு. கண்ணன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| 4. | அ.சா.4 | : | திரு. முருகன் | பார்வை மகஜர் சாட்சி |
| 5. | அ.சா.5 | : | திரு. இளையராஜா | பார்வை மகஜர் சாட்சி |
| 6. | அ.சா.6 | தி | திரு. ராமகிருஷ்ணன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| 7. | அ.சா.7 | : | திரு. S. ஆனந்தபாண்டி | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| 8. | அ.சா.8 | : | திரு. முருகன் | காவல் உதவி ஆய்வாளர் |

***(S.T.C. No. 07 of 2025)***

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | : | புகார் மனு |
| 2. | அ.சா.ஆ.2 | : | பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும். |
| 3. | அ.சா.ஆ.3 | : | மனு ரசீது எண்.632/2021 |
| 4. | அ.சா.ஆ.4 | : | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | : | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | : | மாதிரி வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | : | TN 60 E 4437 என்ற பதிவு எண்ணிற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| 8. | அ.சா.ஆ.8 | : | TN 84 F 3547 என்ற பதிவு எண்ணிற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |

**<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u>** : இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்:</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>**
**<u>மற்றும் சான்று பொருட்கள் :</u>** இல்லை

AASAY MARUDHU P
Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.27 19:45:24 +0400

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

**<u>குறிப்பு :</u>**

1)வழக்கின் முடிவு காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.

2)எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3)வழக்கு விசாரணையின்போது எதிரி காவல் நிலைய பிணையிலிருந்தார்.

4)இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

***(S.T.C. No. 07 of 2025)***

**நீதித்துறை நடுவர்**
**நீதிமன்றம்,**
**தேனி.**
**STC No.07/2025**
**Judgement**
**Dated: 27.03.2026**